**அனுராதபுரம் பல்கலைக்கழகக் கல்லூரி – 2016**

-----------------------------------------------------------------------

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் அனுராதபுரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு மற்றும் 2014 ஒக்தோபர் 03 ஆந் திகதிய 1882/51 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 49(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

அனுராதபுரம் பல்கலைக்கழக கல்லூரியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணனியின் கீழ் மூலதனமாக்கப்பட வேண்டிய ரூபா 421,500 பெறுமதியான CCTV கெமரா முறைமை பொருத்தும் செலவினம் கட்டிடத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டமையின் காரணமாக கட்டிடம் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் கணனி அப்பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் பயன்படுத்தப்படுகின்ற பல்கலைக்கழகக் கல்லூரியில் அமைந்துள்ள கட்டிடத்தின் பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 730,000 பெறுமதியான 02 Digital Oscilloscope உபகரணங்களுக்காக 05 வருட உத்தரவாதச் சான்றிதழ் அதற்குரிய கேள்வி ஆவணத்தின் படி வழங்க வேண்டியிருந்த போதிலும், கொள்வனவு செய்யப்பட்ட அந்த உபகரணத்திற்காக உத்தரவாதச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 5(உ) பிரிவு மற்றும் 2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக கல்லூரி சட்டவாக்கத்தின் 16(2)(ஈ) மற்றும் (உ) பந்திகள் | வருடாந்த பாதீட்டுடன் வியாபாரத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756(1) | பதிவேட்டுப் பொருட்கள் தொடர்பாக முறையான பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 07/2009 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | நிறுவனத்தின் ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கைகளைப் பதிவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும், பல்கலைக்கழகக் கல்லூரியின் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரில் 34 பேர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கைகளைப் பதிவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2009 திசெம்பர் 02 ஆந் திகதிய அரச துறையில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான கொள்கை மற்றும் செயல் நடைமுறைகளுக்கான ஈ - அரசாங்க கொள்கை இலக்கம் 010106 | ரூபா 2 மில்லியனுக்கு மேல் தகவல் தொழில்நுட்ப செயற்திட்டத்திற்காக தகவல் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் ஆலோசனைச் சேவை பெறப்பட வேண்டியிருந்த ஆலோசனைச் சேவை பெறப்பட வேண்டியிருந்த போதிலும் 2016 இல் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்திற்காக ரூபா 13,724,870 செலவில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக தகவல் தொடர்பு தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் ஆலோசனை பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கல்லூரியின் நிதி விளைவு ரூபா 453,080 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 148,756 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 601,836 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது

ஊழியர் ஊதியம், வழங்கல்கள், சேவைகள் மற்றும் பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 10,134,353 இனால் அதிகரித்திருந்த போதிலும், மீண்டெழும் அரச வருமானம் ரூபா 11,354,434 இனால் அதிகரித்திருந்தமை மேற்கூறப்பட்ட முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறைல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைச் சீராக்கியதன் பின்னர் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் பங்களிப்பு முறையே ரூபா 38,650,689 ஆகவும் ரூபா 27,643,516 ஆகவும் இருந்தமையால் மீளாய்வாண்டின் பங்களிப்பில் ரூபா 11,007,173 தொகையான அதிகரிப்பொன்றைக் காண முடிந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) 2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழக கல்லூரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கட்டுப்பாட்டுச் சபை தயாரித்த நெறிமுறைகளின் பிரகாரம் தேசிய தொழில் தகைமைகள் (NVQ) 5, 6 மற்றும் 7 ஆம் மட்டங்களின் பாடநெறிகள் மற்றும் அதுவும் அதற்குச் சமமான மட்டங்களில் வேறு தொழில்நுட்பப் பாடநெறிகளை நடாத்துதல் கல்லூரியின் நோக்கங்களாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும், கல்லூரி நடாத்துகின்ற 08 பாடநெறிகளுக்காக தொழில்சார் மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிலிருந்து (NVQ) 5,6 மற்றும் 7 ஆம் மட்டங்களின் தொழில் தரக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ் (accreditation) பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பல்கலைக்கழக கல்லூரியின் ஒவ்வொரு பாடநெறிகளுக்குரியதாக நடாத்தப்படுகின்ற பரீட்சைகளின் பெறுபேறுகளை விநியோகிப்பதற்காக கவனத்தில் கொள்ளக்கூடிய காலதாமதமொன்று ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அடிப்படை பரீட்சை மற்றும் 2015 இன் முதலாவது ஆறு மாத (செமெஸ்டர்) பரீட்சைப் பெறுபேறுகள் ஒரு வருடம் தாமதமாகியிருந்ததுடன் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட ஏனைய பரீட்சைகளின் பெறுபேறுகளை விநியோகித்தலின் தாமதம் 06 மாதங்களை விஞ்சியிருந்தது.

(ஆ) நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்த 2016 - 2018 இன் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் அடையக்கூடியதாக இருந்த கீழே குறிப்பிடப்படும் செயற்பாடுகள் அடையப்பட்டிருக்கவில்லை.

(i) மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கையை 08 முதல் 09 வரை அதிகரித்து, ஆட்சேர்க்கும் எதிர்பார்ப்புடன் மாணவர்களின் எண்ணிக்கையை 270 வரை அதிகரித்துக் கொள்ள வேண்டியிருந்த போதிலும், நடாத்தப்பட்ட 08 பாடநெறிகளுக்குரியதாக மாத்திரம் 258 மாணவர்கள் பதிவு செய்திருந்த போதிலும் அதில் 54 மாணவர்கள் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர். அதன் பிரகாரம் 8 பாடநெறிகளின் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்ட மாணவர்களின் எண்ணிக்கை 204 வரை குறைவடைந்திருந்தது.

(ii) கல்லூரியின் கற்கைச் சூழலை அபிவிருத்தி செய்வதற்குரிய தொழில்சார் வழிகாட்டிப் பிரிவு (Career guidance unit) மற்றும் மாணவர் ஆலோசனைப் பிரிவு Student Counselling Unit) தாபிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அப்பிரிவு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கல்லூரியின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியினர் 27 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 15 ஆகவும் இருந்ததுடன் அதன் பிரகாரம் 12 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக புதிதாக ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்ததுடன் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பரீட்சை பெறுபேறுகளை விநியோகிப்பதற்காக கவனத்தில் கொள்ளக்கூடிய கால தாமதம் ஏற்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

## 4.3 இனங்காணப்பட்ட நட்டம்

1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 37(அ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியினால் வழங்கப்பட வேண்டிய தவணை அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 6,093 மிகைக் கட்டணமும், பங்களிப்புப் பணம் செலுத்துதலிலுள்ள தாமதத்தின் காரணமாக ரூபா 4,201 மிகைக் கட்டணமும் கல்லூரியின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 4.4 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

கேள்வி சமர்ப்பித்த மாதிரிகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் பிரகாரம் இலத்திரனியல் பாடநெறிக்காக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,500,000 பெறுமதியான 06 ஆய்வுகூட உபகரணங்கள் (Oscilloscope Analogue) தாய்லாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட உபகரணமாக இருக்க வேண்டிய போதிலும், பௌதீக பரிசோதனையின் போது அந்த உபகரணங்கள் சீனாவில் தயாரிக்கப்பட்ட உபகரணங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 கணக்காய்வுக் குழு

2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பீஈடீ 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கல்லூரியினால் கணக்காய்வுக்குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கல்லூரியின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பொருட் பதிவேட்டுக் கட்டுப்பாடு | ஒவ்வொரு பிரிவிற்காகவும் நாளதுவரையாக்கப்பட்ட பொருட் பதிவேடு பேணப்பட்டிருக்காமை. |
| (ஆ) | சொத்துக்களின் முகாமைத்துவம் | சொத்துக்களை கணக்கு வைத்தல் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை. |
| (இ) | வாகனக் கட்டுப்பாடு | நிறுவனத்திற்குச் சொந்தமான குழாம் வாகனங்களுக்குரிய ஓட்ட விபரங்களை உள்ளடக்கிய ஓட்ட அட்டவணை உரிய பிரகாரம் பேணப்படாமை. |